**MCOP. No.3679/ 2023   C/W 3680, 3681, 3682, 3683, 3684, 3685/23**

**DATE:21.01.2026**

Deposition of Witness : P.W.5

Name : Mr. **அஸ்வின்**Petitioner in (MCOP.3683/2023,

Father/Husband Name : Mr.**கிகன்**

Age :31

Address :

Cell Phone No. :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 21th day of january 2026

---

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர். நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னால் கூறப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய தரப்பில் பின்வரும் ஆவணங்களைத் தாக்கல் செய்கிறேன்.

| | |
|---|---|
| மசாஆ 29 | விபத்து பதிவேடு |
| மசாஆ 30 | ஆதிபராசக்தி மருத்துவமனை வெளிநோயாளி சிகிச்சை நோட்டு |
| மசாஆ 31 | மருத்துவ பில்கள் ரூ.5181.94/– |
| மசாஆ 32 | ஸ்கேன் ரிப்போர்ட் |
| மசாஆ 33 | ஆதார் கார்டு நகல் |
| மசாஆ 34 | வங்கி கணக்கு புத்தகம் நகல் |
| மசாஆ 35 | பான் கார்டு நகல் |
| மசாஆ 36 | மருத்துவ பரிந்துரை சீட்டு |

அவை மசாஆ 29 முதல் 36 வரை குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்துசமயத்தில் நீங்கள் என்ன வாகனத்தில் பயணம் செய்தீர்கள் என்றால் நான் மினிபேருந்தில் பயணம் செய்தேன். மினி பேருந்தில் காப்பீடு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 1ம்எதிர்மனுதாரர் மினிபேருந்து TN18 AV–4126 என்ற வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. உங்களுடைய மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு எண் TVS Excel Super பதிவு எண் TN–18 AV–4126 என்ற இருசக்கரவாகனத்திற்கு தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் நஷ்டஈடு பெற வேண்டிஇருந்தால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் பெறமுடியும் என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.1ம்எதிர்மனுதாரர் வாகனம் சம்பந்தமான ஓட்டுநர் உரிமம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பயணம் செய்த மினிபேருந்திற்கு முன்னால் எந்த வாகனம் சென்றது என்றால் லாரி சென்று கொண்டிருந்தது. இந்த விபத்திற்கு காரணம் லாரி திடீரென்று நின்றதால் தான் விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் லாரியின் உரிமையாளரையும் அதன் காப்பீடுதாரையும் ஒரு தரப்பினராக சேர்க்காததால் உங்கள் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நீங்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களுக்கு ஏற்ப்பட்டுள்ளது சொற்ப காயங்கள் என்றால் சரிதான்.

இந்த விபத்தினால் உங்களுக்கு ஏற்ப்பட்ட காயங்கள் முற்றிலும் குணமாகி விட்டது என்றும் இந்த விபத்தினால் உங்களுக்கு எவ்வித நிரந்தர ஊணமோ,வருமான இழப்போ ஏற்ப்படவில்லை என்றால் சரியல்ல.பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

X

என்னால் தட்டச்சருக்கு திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவர் சரி என ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

தேதி:21.01.2026

**Sd/– R.Jagadeesan**
3 ஆம் நீதிபதி
சிறுவழக்குகள் நீதிமன்றம்.